PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349
11, South Karumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jnrgroup.org

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 26 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 137

நிலுவையில் உள்ள காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் அனைத்தையும் பதிவேற்ற வேண்டும்: தமிழக ரியல் எஸ்டேட் திட்ட மேம்பாட்டாளர்களுக்கு TNRERA உத்தரவு



சென்னை – 26 நவம்பர், 2026 தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தில் (TNRERA) பதிவு செய்துள்ள ரியல் எஸ்டேட் திட்டங்களின் மேம்பாட்டாளர்கள், நிலுவையில் உள்ள காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் (QPRs) அனைத்தையும் தவறாமல் பதிவேற்ற வேண்டும் என்று ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

சட்டப்பூர்வத் தேவைகளைப் பின்பற்றத் தவறினால், ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம், 2016-இன் பிரிவு 61 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின்படி அபராத நடவடிக்கைக்கு மேம்பாட்டாளர்கள் உள்ளாக நேரிடும் என்றும் ஆணையம் எச்சரித்துள்ளது.

TNRERA-வில் பதிவு செய்யப்பட்ட சில கட்டுமானத் திட்டங்களின் மேம்பாட்டாளர்கள், தங்களது காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளை ஆணையத்தின் இணையதளத்தில் தொடர்ந்து பதிவேற்றாமல் இருப்பது தெரியவந்ததைத் தொடர்ந்து, இந்த மாதத் தொடக்கத்தில் ஆணையம் சுற்றறிக்கை வெளியிட்டது.

ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம், 2016-இன் பிரிவு 11(1)-ன்படி, ஒவ்வொரு மேம்பாட்டாளரும் பொதுமக்கள் பார்வையிடும் வகையில் TNRERA இணையதளத்தில் காலாண்டு முன்னேற்ற அறிக்கையைப் பராமரித்து, அவ்வப்போது புதுப்பிக்க வேண்டும்.

ரியல் எஸ்டேட் துறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கும், வீடு வாங்கத் திட்டமிடுபவர்களும் ஏற்கெனவே ஒதுக்கீடு பெற்றவர்களும் பதிவு செய்யப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் தற்போதைய நிலை குறித்த புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெறுவதற்கும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது முக்கியமான சட்டப்பூர்வக் கடமையாகும். இத்தகைய அறிக்கைகளைப் பதிவேற்றத் தவறுவது பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களை மறைப்பதுடன், சட்டத்தின் நோக்கத்தையும் சிதைக்கிறது என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.